# DEPOSITION OF WITNESS
## Chapter XXIII Code of Criminal Procedure
## IN THE COURT OF SESSIONS JUDGE
## TIRUVARUR
### Sessions Case No.110/2025

**Deposition of Witness for Prosecution PW 8**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | கார்த்திகா | Father's Name | : | கருப்பையா |
| Village | : | திருச்சி | Taluk | : | திருச்சி |
| Calling | : | | Age | : | 49 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 23rd day of February 2026.**

**(Accused absent. For petition U/s. 355 BNSS is filed and allowed).**

**முதல் விசாரணை**

நான் தற்போது திருச்சி காவல் சரக காத்திருப்பு பட்டியலில் உள்ளேன். கடந்த 02.07.2024 ம் தேதி திருத்துறைப்பூண்டி மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணியிலிருந்தபோது தலைமை காவலர் 927 கனகராஜ் மற்றும் தலைமை காவலர் 1058 தனபாக்கியம் ஆகியோருடன் மதுவிலக்கு ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தபோது திருத்துறைப்பூண்டி முல்லியாற்றின் அருகே பகல் 12.30 மணியளவில் எங்களை கண்டதும் ஓட எத்தனித்த ஒரு நபரை பிடித்து விசாரிக்க அவர்

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.23 15:17:34 +0530

பெயர் யோகாம்பினை என கூறினார். அவர் நின்ற இடத்தை சோதனை செய்தபோது வெள்ளை நிற சாக்கு மூட்டையில் தமிழக அரசால் தடை செய்யப்பட்ட பாண்டிச்சேரி சாராயம் 40 லிட்டர் பிடிக்க கூடிய 4 பாலிதீன் பைகளில் தலா 30 லிட்டர் வீதம் மொத்தம் 120 லிட்டர் பாண்டி சாராயம் வைத்திருந்தார். அதை முகர்ந்து பார்த்தபோது ஒருவித விஷ நெடியுடன் வாடை வீசியது. அதை மேலும் விசாரிக்க அவர் காரைக்கால் வாஞ்சியூரிலிருந்து சாராயம் வாங்கி வந்து அதில் போதை மருந்து கலந்து விற்பனை செய்வதாகவும் அவரிடம் எந்த உரிமமோ அனுமதியோ இல்லை எனவும் கூறினார். எதிரி யோகாம்பிகையை 12.45 மணியளவில் சம்பவ இடத்தில் குற்ற காரணம் கூறி கைது செய்தேன். பின் 13.00 மணிக்கு எதிரி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் கணேசன், கதிர்வேல் ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்தேன். 13.45 மணிக்கு எதிரியிடமிருந்து 120 லிட்டர் பாண்டி சாராயத்தை தலைமை காவலர் 927 கனகராஜ் மற்றும் தலைமை காவலர் 1058 தனபாக்கியம் ஆகியோர் முன்னிலையில் அ.சா.ஆ.1 கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினேன். 120 லிட்டர் பாண்டி சாராயத்தில் 650 மிலி பிடிக்க கூடிய 2 கண்ணாடி பாட்டில்களில் தலா 500 மிலி வீதம் மாதிரிக்கு எடுத்து SHO ஷீல் வைத்தும் மீதமுள்ள 119 லிட்டர் விஷ சாராயத்தை 14.00

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.23 15:17:40 +0530

மணிக்கு தலைமை காவலர் 927 கனகராஜ் மற்றும் தலைமை காவலர் 1058 தனபாக்கியம் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்திலேயே 32 TNP Act படி அ.சா.ஆ.2 அழிப்பு மகஜர்படி கொட்டி அழித்தேன். 2 கண்ணாடி பாட்டில்கள் ஏற்கனவே சா.பொ.1 வரிசையாக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்னர் 14.15 மணிக்கு சாட்சிகள் குசேலன், அய்யப்பன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். அந்த பார்வை மகஜர் ஏற்கனவே அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அந்த மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.7**. பின்னர் எதிரி மற்றும் தடயத்துடன் நிலையம் வந்து 15.00 மணிக்கு எதிரி மீது திருத்துறைப்பூண்டி மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு காவல் நிலைய கு.எண் 438/2024, TNP Act 4(1)(aaa), 4(1-A) உ/இ பாநிச பிரிவு 123 ன்கீழ் முதல் தகவலறிக்கை பதிவு செய்தேன். அந்த முதல் தகவலறிக்கை **அ.சா.ஆ.8**. 02.07.2024 அன்று யோகாம்பிகை என்பவரை எதிரியின் வீட்டின் பின்புறம் உள்ள முல்லியாற்றாங்கரையில் குற்ற காரணம் கூறி கைது செய்து சாட்சிகள் கதிர்வேல், கணேசன் ஆகியோர் முன்னிலையில் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்யதேன். அதில் என்னை அழைத்து சென்றால் நான் வைத்திருந்த 120 லி. பாண்டி விஷ சாராயத்தை எடுத்து ஆஜர் செய்வேன் என்ற ஒப்புதல்

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.23 15:17:45 +0530

வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.9**. சா.பொ.1 வரிசை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட படிவம் 91 **அ.சா.ஆ.10**. 02.07.2024 அன்று சாட்சிகள் குகேலன், அய்யப்பன், கதிர்வேல், கணேசன், தலைமை காவலர்கள் தனபாக்கியம், கனகராஜ் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். T.No.1681 / 2024, TAN / PRO / 88 / 2024, Dated 15.07.2024 தேதியிட்ட அறிக்கை **அ.சா.ஆ.11**. 16.07.2024 அன்று Scientific Officer செந்தில்பாபுவை விசாரித்தும் 17.07.2024 அன்று முதல்நிலை காவலர் சத்தியராஜை விசாரித்தும் வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். 13.08.2024 அன்று டாக்டர் பாபு வெங்கடேஷ சிவனை விசாரித்து கருத்துரை பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். எனது புலன் விசாரணை முடித்து 27.11.2024 அன்று எதிரி மீது இதச பிரிவுகள் TNP Act 4(1)(aaa), 4(1-A) உ/இ பாநிச பிரிவு 123 ன்கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**குறுக்கு விசாரணை**

நான் ரோந்து பணிக்கு இருசக்கர வாகனத்தில் சென்றோம். புகாரிலோ இறுதி அறிக்கையிலோ இருசக்கர வாகனத்தின் பெயர் மற்றும் பதிவெண் குறிப்பிடவில்லை என்றால் சரி. திருத்துறைப்பூண்டி காமராஜர் தெரு குடியிருப்புகள் அதிகம் உள்ள பகுதி என்றால் சரி. அந்த இடத்திலிருந்து தனி நபர் சாட்சிகள் யாரையும்

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.23 15:17:50 +0530

விசாரணை செய்யவில்லை என்றால் சரி. வாகன தணிக்கைக்கு செல்லவில்லை எனவும் சென்றிருந்தால் அந்த இடத்தின் தனி நபர்களை சாட்சியாக விசாரித்திருப்பேன் எனவும் சொன்னால் தவறு. நான் சொன்ன தேதி, நேரம், இடத்தில் எதிரியை கைது செய்யவில்லை எனவும் எதிரி எந்த ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை எனவும் எதிரியிடமிருந்து சான்று பொருள் எதுவும் கைப்பற்றப்படவில்லை எனவும் சொன்னால் தவறு. வழக்காவணங்கள் மற்றும் சான்று பொருள் பின்னிட்டு காவல் நிலையத்தில் வைத்து ஜோடிக்கப்பட்டவை என்றால் தவறு. புள்ளி விபர கணக்கிற்காக எதிரி மீது போடப்பட்ட பொய் வழக்கு என்றால் தவறு.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.23 15:17:55 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.